# ஆத்மஜோதி



பற்றில்லாப் பரமன் பதங்களைப் பற்றியே
பற்றின்றிப் பணிசெய்த பரம தயாளன்.

ஓம்



# ஆத்மஜோதி

ஓர் ஆத்மீக மாத வெளியீடு

எல்லாஉலகிற்கும் இறைவன் ஒருவனே
எல்லா உடலும் இறைவன் ஆலயமே — சுத்தானந்தர்

சோதி 5 | விஜய வருஷ ஐப்பசி மாசம் திகதி 1 | சுடர் 12

## பொருளடக்கம்


| | |
|---|---|
| அடியேனைக்காப்பதற்கு இதுவே தருணம் ஐயா! | 309 |
| ஆனந்தக்களிப்பு | 310 |
| ஓர் தீர்க்கதரிசியின் நூற்றுண்டுவிழா | 311 |
| ஞானவாசிட்டம், சிகித்வஜனும்–சூடாலையும் | 317 |
| மனோன்மணிமாலை | 320 |
| முருகா தருவாய் அருளே! | 322 |
| குருமார் தோற்றத்தில் பலர்: உண்மையில் ஒருவர் | 324 |
| காந்தி நாமாவளி | 327 |
| பிரார்த்தனையின் அவசியமும் கடவுள் நம்பிக்கையும் | 328 |
| உதிர்ந்த மலர் | 330 |
| உணவைப் பழிக்காதே–உணவை எறியாதே | 332 |
| செய்தித்திரட்டு | 334 |
| மலைவளர் காதலி | 336 |



## ஆத்ம ஜோதி

❀ ஆயுள் சந்தா ரூபா 75/- ❀ வருடசந்தா ரூபா 3/

ஆத்மஜோதி நிலயம் நாவலப்பிட்டி (இலங்கை)

கௌரவ ஆசிரியர்:- க. இராமச்சந்திரன்
60 மல் வீதீஸ் கொள்ளுப்பிட்டி, கொழும்பு

பதிப்பாசிரியர்: நா. முத்தையா
ஆத்மஜோதிநிலயம் நாவலப்பிட்டி.

அச்சுப்பதிப்பு: சரவண அச்சகம்–நாவலப்பிட்டி


உ



# அடியேனைக் காப்பதற்கு இதுவே தருணம் ஐயா!

சரணகம லாலயத்தை அரைநிமிஷ நேரமட்டில்
தவமுறைதி யானம்வைக்க அறியாத
சடகசட மூடமட்டி பவவினையி லேசனித்த
தமியன்மிடி யால்மயக்க முறுவேனோ?
கருணைபுரி யாதிருப்ப தெனகுறையி வேளைசெப்பு
கயிலைமலை நாதர்பெற்ற குமரோனே!
கடகபுய மீதிரத்ன மணியணிபொன் மாலைசெச்சை
கமழுமண மார்கடப்ப மணிவோனே!
தருணமிதை யாமிருத்த கனமதுறு நீள்சவுக்ய
சகலசெல்வ யோகமிக்க பெருவாழ்வு
தகைமைசிவ ஞானமுத்தி பரகதியு நீகொடுத்து
தவிபுரிய வேணுநெய்த்த வடிவேலா!
அருணதள பாதபத்ம மதுநிதமு மேதுதிக்க
அரியதமிழ் தானளித்த மயில்வீரா!
அதிசயம நேகமுற்ற பழநிமலை மீதுதித்த
அழகுதிரு வேரகத்தின் முருகோனே!

(சுவாமிமலை திருப்புகழ்)

பொழிப்புரை:- கூர்மையான வேலாயுதத்தைத் தரித்தவனே! செந்தாமரை மலர்களையொத்தநினது பாதங்களை நித்தியம் துதிக்குமாறு அருமையான தமிழ்மொழியை அருளிய மயில்வீரா! பழனிமலையில் எழுந்தருளியிருக்கும் அழகுத் தெய்வமே! சுவாமிமலையில் விளங்கும் ஞான சொரூபியே! எல்லா உயிர்களும் இறுதியில் வந்துதங்கு மிடமான நினது திருவடிகளை ஒருகணமேனும் முறைப்படி தியானம் பண்ணத்தெரியாத அறிவிலியும், மீண்டும் மீண்டும் பிறப்பதற்கும் இறப்பதற்குமே வினையை உடையவனுமாகிய இந்த ஏழை மயங்கித்தியங்கும்படிவிட்டுச் சும்மா இருத்தல் உனக்கு நீதியோ? அடியேன்மீது கருணைகாட்டாமல் இருப்பதற்கு யான் செய்த பெரிய குற்றந்தான் எதுவோ? அதை எனக்கு இச்சமயம் சொல்லவேண்டும்.

கைலாசபதி பெற்ற குமார சுவாமியே! இரத்தினங்கள் இழைக்கப்பட்ட பொன்மாலையையும் வெட்சி மலர்மாலையையும் அணிந்ததோள்களையுடைய பெருமானே! அடியேனைக் காப்பதற்கு இதுவே தருணம் ஐயா! இகத்தில் சகல செல்வங்களும் பொருந்திய சுகவாழ்வையும் பெருமை வாய்ந்த சிவஞானத்தையும், பரத்தில் வீட்டின்பத்தையும் அடியேனுக்குக் கொடுத்து உதவிபுரியவேண்டும்.

# ஆனந்தக்களிப்பு

சங்கர சங்கர சம்பு - சிவ
சங்கர சங்கர சங்கர சம்பு

ஆதி யனாதியு மாகி - எனக்
கானந்த மாயறி வாய்நின் றிலங்குஞ்
சோதி மௌனியாய்த் தோன்றி அவன்
சொல்லாத வார்த்தையைச் சொன்னாண்டி தோழி
(சங்கர)

சொன்னசொல் லேதென்று சொல்வேன் - என்னைச்
சூதாய்த் தனிக்கவே சும்மா விருத்தி
முன்னிலை யேதுமில் லாதே - சுக
முற்றச்செய் தேயெனைப் பற்றிக்கொண் டாண்டி
(சங்கர)

பற்றிப் பற்றற வுள்ளே - தன்னைப்
பற்றச்சொன் னான்பற்றிப் பார்த்த விடத்தே
பெற்றதை யேதென்று சொல்வேன் - சற்றும்
பேசாத காரியம் பேசினான் தோழி
(சங்கர)

பேசா விடும்பைகள் பேசிச் - சுத்தப்
பேயங்க ளாகிப் பிதற்றித் திரிந்தேன்
ஆசா பிசாசைத் துரத்தி - ஐய
னடியனைக் கீழே யடக்கிக்கொண் டாண்டி
(சங்கர)

*

அடக்கிப் புலனைப் பிரிந்தே - அவ
னாகிய மேனியி லன்பை வளர்த்தேன்
மடக்கிக் கொண்டா னென்னைத் தன்னாட் - சற்றும்
வாய்பேசா வண்ண மரபுஞ் செய்தாண்டி
(சங்கர)

மரபைக் கெடுத்தனன் கேட்டேன் - இத்தை
வாய்விட்டுச் சொல்லினன் வாழ்வெனக் கில்லை
கரவு புருஷனா மல்லன் - என்னைக்
காக்குந் தலைமைக் கடவுள்காண் மின்னே!
(சங்கர)

*



ஓர் தீர்க்க தரிசியின்

# நூற்றாண்டு விழா

—[ஆசிரியர்]—

இந்துக்களாகிய நமக்கு ஆத்மீகத்துறையில் அளப்பரும் பெருமையைத் தரும் முறையில் நூற்றாண்டு விழாக்களைக்காணும் பாக்கியம் நிகழும் விஜய வருஷத்திற்குக் கிடைத்துள்ளது. ஒன்று தாய்நாட்டுக்கும், பெண்ணினம் முழுவதற்குமே தனிச் சிறப்பைக் கொடுத்த தூய அன்னை சாரதாதேவியாரின் விழா; இது அடுத்த மார்கழி மாசத்தில் நடைபெறும், மற்றையது சேய் நாடாகிய இலங்கைக்குச் சிறப்பைத்தந்த சேர். பொன்னம்பலம் அருணாசலம் அவர்களின் விழா; இது போனமாசங் கொண்டாடப்பட்டது.

சென்ற நான்கு வாரங்களாக இலங்கையில் எங்கு பார்த்தாலும் சேர். பொன்னம்பலம் அருணாசலத்தின் நூற்றாண்டு நினைவுபற்றிய பேச்சாகவும் எழுத்தாகவுமேயிருந்தது. சாதி, நிறம், சமயம், மொழி முதலாய பேதம் எதுவுமின்றி, இந்த நாட்டில் வாழும் எல்லா மக்களும், ஆர்வத்துடன் ஒருங்கு சேர்ந்து கொண்டாடிய முதலாவது நூற்றாண்டு விழா இதுவேயெனத் தயங்காமற் கூறலாம். இவ்வளவிற்கும் காரணம் மக்களின் நன்றியுணர்ச்சியும் அத்தொடர்பில் எழுந்த பிரசாரமும் என்று கூறிவிடல் முழு உண்மையாகமாட்டாது. அப்பெரியாரதும் அவரை ஆட்கொண்டு வழிகாட்டியமகான்களதும் ஆத்ம சக்தி முன்னின்றுதான் எல்லாம் செவ்வனே நிறைவேறின என்று கூறுதலே பொருத்தமுடையது. இந்த உண்மையை, கொழும்பிலிருந்து ஆங்கிலத்தில் வெளிவரும்'கத்தோலிக்க தூதன்' (**Catholic Messenger** 19-9-53) மிகவும் அழகாய் விளக்கியிருப்பது கண்டு மகிழ்ச்சியடைகின்றோம்.

சேர். பொன். அருணாசலத்திற்கு பிதிரார்ச்சிதமாகக் கிடைத்தது வள்ளன்மை. தாய்வழித்தேட்டமாக வந்தவை அரசியல் அறிவும் ஆத்ம ஞானமுமாகும். இந்த மூன்று சம்பந்துக்களுள் அவரது வாழ்வில் முக்கிய இடம் பெற்றது ஆத்ம ஞானமேயாம், இக்காரணம் பற்றியே "ஆத்ம ஜோதி" யில் அவரது வரலாறும் வாக்கும் இடம்

பெறுகின்றன. சின்னஞ் சிறு வயசிலேயே அருணாசலத்தாரின் உள்ளத்தில் கடவுள் பக்தியையும் சமய சாஸ்திர அறிவையும் செழிக்கச்செய்த பெருமை அவரது தாய் வழிப்பாட்டியான விசாலாட்சி அம்மையாரைச் சார்ந்ததாகும். அவரின் முதல் குரு இப்பாட்டியேயெனலாம். கொழும்பிலிருந்து கால்நடையாகப் பலமுறை கதிர்காமயாத்திரை செய்த இந்த அம்மையாரின் முருகபக்தி அக்கால சைவ சமயிகட்கு ஓர் முன்மாதிரியாக இருந்ததென்பதை ஓர்பெரியார்வாயிலாகக் கேட்டுள்ளோம். 1873-ம் ஆண்டில் சமாதியடைந்த மங்களபுரி சுவாமிகளுடனும், அவரது குருவான பக்தசிரோமணி வாலசுந்தரியுடனும் விசாலாட்சி அம்மையாருக்கு அத்யாத்ம உறவு இருந்ததாக எண்ணுவதற்கிடமுண்டு.

நெடுங்காலம் அந்நியரது ஆட்சிக்கு அடிமையாகி, ஐரோப்பிய நாகரிகப் பழக்க வழக்கங்களையே பெரிதாக மதித்துப்பேணி, ஞான வாழ்வை உயிர்நிலையாகக் கொண்ட நமது பழம் பண்பாட்டை முற்றிலும் மறந்து, சுயமதிப்பை இழந்து மக்கள் வாழ்ந்த காலம் சென்ற நூற்றாண்டு. அதனால் வரப்போகும் பெருங்கேட்டைதங்கள் இனத்தார்க்கு முன் யோசனையுடன் எடுத்துரைத்து எச்சரிக்கை செய்தவர்களுள் முதன்மை பெற்றவர்கள் இந்தியாவில் சுவாமி விவேகானந்தர், இலங்கையில் சேர். பொன். அருணாசலம். இருவரும்இந்துமதப் பழம் பண்பாட்டுடன், மேல் நாட்டு உயர்ந்த கலைகளையும், கருத்துக்களையும் நன்கறிந்த தீர்க்கதரிசிகள். விவேகானந்தர் அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் செய்த பிரசங்கங்கள் நூல்வடிவில் வெளிவந்ததும் அவற்றைப்பற்றி இலங்கையிலும் இங்கிலாந்திலும் பிரசாரம் ஆரம்பித்தவர் அருணாசலமவர்களே.

அருணாசலத்தாரிடம் விரக்தி இயல்பாகவே, பூர்வஜென்ம வாசனையாக, அமைந்திருந்தது. முப்பத்தைந்தாம் வயசில் ஞானவாசிட்டத்தின் வைராக்கியப் பிரகரணம் அவரதுகவனத்தை ஈர்த்ததையும், உத்தியோகத்தையும் உலகபோகத்தையும் துறந்துவிட அவர் எண்ணியதையும் நாம் காண்கிறோம். பின்னர் படிப்படியாக, ஞானவாசிட்டக்கதைகள் வளர்ந்த விதமே அவரது ஆத்மஞானமும் விரிவடைந்தது. அந்த நூலில் ஞானபாகத்திலிருந்து சுகர்சரிதையையும் கர்ம பாகத்திலிருந்து சிகித்வஜன் சூடாலை - வரலாற்றையும் அவர் தெரிந்தெடுத்து ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளது இதற்குச்சான்றாகும். பகவத் கீதையும் குரு உபதேசமும் நிஷ்காமியகர்ம யோகத்தை நன்கு அறிவுறுத்தின. அதன் பயனாக அறுபது வயசுவரைக்



கும் அவர் உத்தியோகத்திலமர்ந்து பற்றின்றிப் பணிசெய்தார்.

எந்தச் சமய சாஸ்திரத்தைக் கற்றாலும், எந்த இலக்கியத்தை ஆராய்ந்தாலும், அவற்றில் ஒருமைகாணும் தன்மை அருணாசலத்தாரின் பெருங்குணங்களுள்ஒன்றாகும். எனவே, அவர் பேணியசைவம் சுத்த சமரச நெறியாகவே இருந்தது. பல நூற்றாண்டுகளாக வீண் வாதஞ்செய்து கொண்டிருந்த வேதாந்த - சித்தாந்த கொள்கையினர்க்கிடையே சமரசப் பாலங்கட்டிய தாயுமானவர் பாடல்கள் அவர் உள்ளத்தில் முதலிடம் பெற்றன. அன்பொருமை, உண்மையொருமை, சமய ஒருமை என்ற மூன்றிலுஞ்சமரசத்தை தாயுமானவர்க்குமுன் உலகில் பிறிதொருவரும் விளக்கியதில்லையென்பது எவரும்மறுக்கொணா உண்மையாகும். அவர் இயற்றிய "ஆனந்தக் களிப்பு" நித்திய சாதனைக்குரிய பாடலாயிற்று. அதில் அடங்கிய அற்புதக் கருத்துக்களையே பின்னர் திருவாசகத்திலும், திருக்கோவையாரிலும் உபநிடதங்களிலும் கண்டார். தமிழ் மொழிப்பயிற்சியில்லாத அன்பர்கட்குப் பயன்படும்பொருட்டு அதனை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துதவினார்.

தமிழ் நாட்டிலும் ஈழத்திலும் குருபக்தியும் அடியார் பக்தியும் அருகிவந்த காலத்தில். அருணாசலத்தார் தமது வாழ்க்கையாலும் வாக்காலும் அவற்றின் பெருமையை விளக்கியது அவர் சைவத்திற்குச் செய்த அருந்தொண்டாகும். இல்லற ஞானியும் தமது குருநாதருமாகிய தஞ்சாவூர் ஸ்ரீ அருள்பரானந்த தேசிகரிடம் அவர்கொண்டிருந்த பக்தியின் சிறப்பு அகஸ்தியர் ஹயக்ரீவரிடமும், திருவாதவூரர் திருப்பெருந்துறையில் குருந்தமரத்தடியில் தோன்றிய பரமாசாரியரிடமும், குமரகுருபரர், மாசிலாமணிதேசிகரிடமும், தாயுமானவர் மூலன்மரபில்வந்த மௌனகுருவிடமும், விவேகானந்தர் இராமகிருஷ்ணரிடமும் கொண்டிருந்த குருபக்தியை நமக்கு நினைவூட்டும்தரத்ததாகும். இக்குருவரிசையில் அவருக்கு எவ்வித தார தம்மியமும் தோன்றவில்லை. எல்லாக்குருவும் ஒருவரே என்ற உண்மையை விளக்கும் கட்டுரையைப் பிறிதோரிடத்தில் காண்க. தமது குருநாதர் தம்பொருட்டும் தமது ஆங்கிலேய அன்பர் எட்வேட்காப் பென்டர் பொருட்டும், குருநாக்கலில் வந்துதங்கிய காலத்தில் மலேரியாக்காய்ச்சலால் பீடிக்கப்பட்டு அந்நோய்காரணமாகவே 1893ம்ஆண்டில் உடலைநீத்தாரென்றதை எண்ணி எண்ணி அவர்விட்ட கண்ணீர்கொஞ்சமல்ல, அத் தொடர்பில் அவர் எழுதியுள்ள கடிதங்களைப் படிப்போர் எவரும் மணிவாசகரின் செத்திலாப் பத்தைப் படித்ததும்உருகுவதுபோல் உருகவே செய்வர், அருள்பரானந்தர் பரகதியடைவதற்கு மூன்று மாசங்கட்கு முன் அருணாசலத்தாருக்கு எழுதிய கடிதத்தில்,

'அறிவை அறிவதுமே யாகும் பொருளென்
றுறுதிசொன்ன உண்மையினை யொருநாளெந்நாளோ'

என்ற தாயுமானவர் வாக்கையும்,

''யான் எனதென்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க்கு
உயர்ந்த உலகம் புகும்''

என்ற குறளையும், கடைசி உபதேசமாக அருளி, தமது உடல் நிலை குறித்து வருந்தாதிருக்குமாறு ஆறுதலுங்கூறினர். இந்த ஞானியைத் தவிர, வேறுபல மகாத்மாக்களது அத்யாத்ம உறவையும் ஆசியையும் அருணசலம் பெற்றிருந்தார். அவர்களுள் முக்கியமாக, கும்பகோணம் மௌனசுவாமி. கதிர்காமம் பால்குடிபாவா (கேசபுரி சுவாமி)' அவரது சீடனை சுராஜ்புரி சுவாமி, மாத்தளை பரமகுரு என்பவர்களை இங்கு குறிப்பிடலாம். 1916-ம் ஆண்டில் கல்கத்தா சர்வகலாசாலையில். "கல்வித்துறையில் கீழ்நாட்டு லட்சியங்கள்" என்ற விஷயம்பற்றி அவர் செய்த சொற்பொழிவில், 1904-ம்ஆண்டில் சமாதியடைந்த பரமதரு சுவாமியின் மகிமையை எடுத்து விளக்கினர். அடியார் உறவு அவரது வாழ்வில் என்ன உன்னத இடம்பெற்றிருந்ததென்பதற்கு இது ஓர் ஒப்பற்ற எடுத்துக்காட்டாகும்.

இதனை உன்னும்போது, இற்றைக்கு முப்பத்தொன்பது, நாற்பதுவருஷங்கட்குமுன் யாம் நேரிற்கண்ட இருகாட்சிகள் மனக்கண்முன் நிற்கின்றன. ஒன்று சுவாமி வேதாசலம் கொழும்புக்கு விஜயஞ்செய்து சைவப்பிரசாரம் செய்தபோது நடந்த சம்பவம்; மற்றையது ஸ்ரீராமக்கிருஷ்ண சங்கத்தைச் சேர்ந்த சுவாமி சர்வானந்தர் முதல்முறையாக கொழும்பு வந்து வேதாந்தமுழக்கம் செய்தபோது கண்டகாட்சி, இவ்விரண்டிற்கும் இடைக்காலம் சரியாக ஓராண்டு. ஜிந்துப்பிட்டி ஞம்லால் சத்திரத்தில் "அருணசலந்துரை" அவர்களின் தலைமையில் வேதாசலம் நடராசதத்துவம் பற்றிப் பேசப்போகின்றாரெனக் கேள்விப்பட்டு, இளைஞர்கட்குள்ள ஆர்வத்துடனும், அக்காலச் சூழலில் நிலவிய பயபக்தியுடனும் பல கிளார்க்மார்களும். உதவிச் சிறுப்டர்களும், கணக்கப்பிள்ளைமாரும், கூடியிருந்தனர். துறவுக்கோலத்துடனும்நல்ல முகக்களையுடனும் சபைக்குவந்தஉபந்நியாசகரை, துரையவர்கள் அடிபணிந்து வரவேற்று அவர் அடியிலிருந்தே கூட்டத்திற்குத் தலைமை வகித்தகாட்சி பெரிய அதிர்ச்சியையும் பரவசத்தையும் உண்டாக்கியது. சர்வானந்தருக்கு வரவேற்பு கொழும்பு கோட்டடியிலிருந்த பொலிரெக்நிக் கட்டிடத்தில் நடைபெற்றது. எல்லாப் பிரமுகர்களும் சில கறுவாக்காட்டுச் சீமாட்டிகளும் சமுகமளித்த பெருங்கூட்டம் அது. சுவாமியை அடிபணிந்து வரவேற்ற அருணசலம் அவர்கள் தமது தலைப்பாகையை எடுத்து மேசைமேல் வைத்துவிட்டு, மாலைபோட்டு மாலை பெற்றார். சபையிலிருந்த சீமான்களின் தலைப்பாகைகள் நடுங்கும் முறையில் கரகோஷம் நடந்தது. அவர் அன்று காட்டிய அடக்கமும் பணிவும் அக்காலச் சிறுமதிச் செல்வச் செருக்கினருக்கு மறக்கமுடியாத படிப்பினையாயிருந்ததெனலாம்.



தமது இறுதி நாட்கள் புண்ணிய பூமியான இந்தியாவில் கழிய வேண்டுமென்பதே அருணசலத்தாரின் பிரார்த்தனை, "அகிலாண்ட கோடியீன்ற அன்னையே! பின்னையுங் கன்னியென மறைபேசும் ஆனந்த ரூபமயிலே!" என்னும் தாயுமானவர் வாக்கு அவர் நாவிலும் பேனமுனையிலும் அடிக்கடி வருவதுண்டு. அதற்குப்பொருந்த, அவர் மதுரை மீனாட்சியம்மையின் தரிசனம்பெற்று அப்பழம்பதியிலுள்ள ஓர் சத்திரத்திலேயே பரகதியடைந்தார்.

திருவாதவூரருக்காக சோமசுந்தரப்பெருமான் பிட்டுக்கு மண் சுமந்து பிரம்படிபட்ட வைகைக் கரையிலேயே தமது உடல் அடக்கஞ்செய்யப்பட வேண்டுமெனக் கூறிவிட்டே பிரிந்தார். ஆனால், அவரது மனைவி மக்கள் அதனைக் கொழும்புக்கு எடுத்துவந்து ஈமக்கிரியைகள் முடித்தனர்.

சேர். பொன். அருணசலத்தை நினைக்கும்போதெல்லாம், அவர் இயற்றிய நூல்களைப் படிக்கும்போதெல்லாம், எமக்கு "மயிலைமுனிவர்' என்று அழைக்கப்பட்ட சேர், (டக்டர்) சுப்பிரமணிய ஐயரின் ஞாபகமே முன்னுக்கு நிற்கும். இருவரும் ஏறக்குறைய ஒரே காலத்தவர்; பலமொழி விற்பன்னர்; ஆரியம், தமிழ், ஆங்கிலம் மூன்றிலும் அரிய ஆராய்ச்சியாளர். மணிஐயர் சபாபதி நாவலருடன் சேர்ந்து திருக்கோவையார் கருத்தை ஆராய்ந்து திளைத்த காலத்து அருணசலத்தார் அதே நூலின் பல சிறந்த பாடல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பதில் ஈடுபட்டிருந்தார். சுவாமி நாதபண்டிதர் தாம் அச்சிட்ட சிவஞான பாடியத்துடன் மணிஐயர் உறவைப்பெற்ற காலத்தில்தான், அருணசலத்தார் சிவஞானபோதத்தின் ஆங்கில மொழி

பெயர்ப்பை வரைந்து முடித்தார். ஐயர் வேதாந்தி, அருணாசலத்தார் சித்தாந்தி, ஆனால், இருவரும் அத்வைதிகள்; சமரஸஞானிகள். மணி ஐயர் பிரம்மஞான சபையிற் சேர்ந்து பெசண்டு அம்மையாருக்கு வலக்கைபோல் தொண்டாற்றுவதற்கு முன்னரேயே, அருணாசலத்தார் அச்சபையை நிறுவியபிளவற்ஸ்கி அம்மையாரதும்கேர்னல்ஆல்கற் அவர்களதும் அரும்பெரும் அத்யாத்ம சேவையைப் பாராட்டியுள்ளார். மணி ஐயரைப் போலவே, அருணாசலத்தார் வீரமும், அஞ்சாமையும் படைத்த உளத்தினர். முந்தியவரின் சுதந்திர முழக்கம் இந்தியாவின் எல்லைக்குள் கட்டுப்படாமல் அமெரிக்காவரையும் சென்றது போலவே, அருணாசலத்தாரின் இந்திய சுதந்திர வீரகர்ஜனை எழுத்துமூலம் இங்கிலாந்து வரைக்கும் சென்றது. இப்பெரியார்களின் வாழ்வு சமயத்தை அடிப்படையாகக் கொண்டதினாலேயே, இத்தனை சிறப்பு வாய்ந்த பணிகளைச் செய்யக்கூடிய ஆற்றல் அவர்கட்கு எளிதாய்க் கிடைத்ததாகும். "ஓர் ஆத்ம ஞானியே உண்மையான நிஷ்காமிய கர்ம யோகியாக வாழமுடியும்" என்பது பகவான் ரமணரின் அருள்மொழி. சமுதாயத்திற்குச் சேவைபுரிய முன்வருவோர் இந்த லட்சயத்தைக் கடைப்பிடிப்பார்களாக!

---

**கீர்த்தனை மலர்**

## தில்லை நடராஜனே!

எடுப்பு

தில்லை நடராஜ னே! - சேயென் முகம்பார்! (தில்லை)

தொடுப்பு

இல்லையிம் மானிலத்தில் ஏழைக்கு வேறுகதி,
அல்லலைப் போக்கியுன் அடிக்கீ ழெனையாண்டருள் (தில்)

முடிப்பு

பல்லுயிர்க் குயிரான எல்லையில் லாவிரிவே!
பலசம யங்களுள்ளும் விளையாடும் செம்பொருளே!
கல்லாலின் கீழிருந்து சொல்லா துணர்த்தவந்த
கருணைக் குருமணியே! தருணம் விரைந்தருளே! (தில்)

வெண்ணீறு பொலிந்திடும் மேனியும், அஞ்சலென
விரிந்த கரமும் சற்றே சிரித்தமுகமும் தோற்ற
மண்ணுடன் விண்ணுலகும் மயங்கிக் களித்துநிற்க
மலரடி யெடுத்தின்பக் கலைநடம் பயின்றிடும் (தில்)

-'பரமஹம்ஸதாசன்'



ஞானவாசிட்டம்

# சிகித்வஜனும்-சூடாலையும்

(சு. பா.)

வசந்த வனத்தில், கற்பக நிழலில் எண்ணிய இன்பங்களெல்லாம் நுகரும் இணை மான்கள் போன்று நீதிமன்னன் சிகித்வஜனும், அழகுச்செல்வி சூடாலையும் தங்கள் இளமையைக் கழித்தனர். இல்லறமும் மன்னறமும் இனிதுறக்காத்துமுதிர்ந்த இக்காதலர் முகத்தில் காலன் வெள்ளி முத்திரைபோட்டான். முதுகு வயதின் சுமையாற் கூன்பட்டது; தார்போட்ட வாழைபோல உலகவாழ்வு பசப்புற்றது; சிற்றின்பம் சப்புற்றது; உலக இன்பத்தினும் உயிரின்பத்தை மனம் தேடிற்று; புறவாழ்வின் மினுக்குகள் பொய்த்தன; ஆன்ம வொளியைத் தேடி மனம் உள்ளே திரும்பியது; இருவர் வாழ்வும் உள்ளும் புறமும் புதிய மாறுதலடைந்தது. இருவரும் ஞானநூல்களைக்கற்றுஅறிந்து ஆராய்தலும், ஆய்ந்து தெளிந்தவழி நிற்றலுமாகக்காலங்கழித்தனர்.

"நான் உடலல்ல், நாடியல்ல, உயிரல்ல, கரணமல்ல, புலனல்ல, பொறியல்ல, மனமல்ல, சங்கற்பமல்ல, ஆணவம் நிறைந்த புத்தியுமல்ல இவையெல்லாம் பற்றாது, இவற்றையெல்லாம் இயக்கும் ஆன்மாவன்றோ யான்? இந்த ஆன்மா சுத்த சைதன்யம், பரஞ்சுடர், சச்சிதானந்தம், அதுவே நான்; எனில் என்னைச்சுற்றியுள்ள இவ்வுலகின் குணதொந்த விகாரங்கள் எல்லாம் மனத்தின்சேட்டைகளன்றோ? இவற்றை நாடகம் போலப்பார்த்து உள்ளே சலியாது நிலைப்பதே இன்பம்" எனத்தேர்ந்த சூடாலை ஆத்ம ஞானப்பிரகாசத்தால் காலைத்தாமரை போன்றும், வஸந்தக் கொடிமலர் போன்றும் புத்தழகு பொலிந்தனள். கண்டான் சிகித்வஜன்; வியந்தான். "என் கண்ணே! நரை திரை மறைந்தது; முதுமை மாறியது; உன் முகம் இளவனப்பெய்தியதே! உன் விழிகளில் ஒரு புதிய இன்பக்கனல் பொலிகின்றது; மனம் காலைபோன்று அமைதி யெய்தியதே! இத்தகைய மாறுதல் எதனால் உனக்கெய்தியது!" என வினவினான். "என் இன்ப! இந்தப் பொலிவு எனது ஆன்மச்சுடரின் எழில் உன்

ளொளி கண்டால், உடலொளி காந்தும். இன்பதுன்பக் காட்சிகளான மனவுலக நாடகங்களுக்குக்கேவலம்சாட்சியாகி,நானான ஆன்மவுணர்வில்நிலைத்தால், ஒருசக்திபிறக்கும். அதன்சைதன்யப்ரகாசம் அகத்தும் முகத்தும் அமைதியாய்நிலவும் ஆன்மாவைக்கண்டுஅறிவாகிப்புறப்பொருள்களுக்கு சாட்சியாகி நிற்கிறேன். அதுவே எனது இன்பப்பொலிவின்காரணம்"என்றனள் சூடாலை."ஆன்மாவையாவது, நீயாவது, காணவாவது, அனைத்தையும் அறவே துறந்த அறிஞர், துறவோர், காடும் மலையும் சுற்றி வற்றிக்கடுந்தவம் புரிந்தன்றோ அதையறிவர்! நீ பெண், அபலை, பேதை, மெல்லியள், அரச போகத்தில் அரண்மனை வாழ்வில், செல்வச்செருக்குடன் வாழும் நீ அதையெப்படியறியமுடியும்? அடி பேதாய் உன் மூளை புரண்டதோ? ஓதாய்" என்று சிரித்தான் சிகித்வஜன். உள்ளங் கனியாத மன்னனுடன் சூடாலை எதிர்பேசாது அறிவடக்கம் பூண்டு முன்போலவே இல்லறப்பணிகளை மறுவறச்செய்து வந்தனள். பொறிபுலனடங்க உள்ளே தீவிரமான ஸஹஜத்யானத்தால், சூடாலை நாளுக்குநாள் தவப்பொலிவு மிகுந்து, பல அற்புதசக்திகளைப்பெற்றாள். அணிமா(சிறுத்தல்), மகிமா (பெருத்தல்), இலகிமா (இலேசாதல்), கரிமா (கனத்தல்), பிராப்தி (எண்ணிய தெய்தல்), பிராகாமியம் (இன்பநுகர்ச்சி,) ஈசித்வம் (ஆட்சிப்பேறு), விசித்வம் (கவர்ச்சி) முதலிய எண் சித்திகளும் அவளைச் சரணமடைந்தன. இத்தகை அற்பு தங்களைக்கண்டும் "இல்லாள், வினைவாழ்வுள்ளாள். துறவற மல்லாள், இவளுக்கெப்படி ஆத்மஞானம் பழுக்கும்?' என்றுஉள்ளுணர்வற்ற சிகித்வஜன் இன்னும் அலட்சியமாகவேயிருந்தனன். ஆனால் தனது அரசவாழ்விலும் அரசனானான்.

ஒருநாள் தனது செல்வங்களை ஏழைகளுக்குவாரியிறைத்தான்; அரியணையை வெறுத்தான். போக வாழ்வைப் பழித்தான். என்வாழ்வுத்துணைவி! போதும் உலகமாயை; இதன் இன்பம் புளித்தது; கனவு தெளிந்தது; பாசமொழிந்தது; கானகத்தனிமையில் கடுந்தவம் புரிகுவன், விடைதருதி" என்று சூடாலையை விளித்தான்.

"எனது இன்ப! மனத்துறவே துறவு; பற்றறுத்து, அன்னியமெண்ணாது, உள்ளத்தில் உள்ளமாகவூன்றி நிற்றலே தனித்தவநிலை. காட்டுத்தனிமையிலும் பற்றற்ற வீட்டுத் தனிமையே தனிமை; வனத்தடையுந் துறவினும் மனத்தடையும் துறவே துறவு; இன்ப துன்பக்கட்டுகள் உலகிலில்லை, உளத்திலுள்ளது; கட்டற்றவுள்ளம், மட்டற்ற வாழ்விலும் 'பற்றற்று அமைதி பெறும்" என்று பலவாகச் சொன்னாள். என்னைத் தடுக்காதே; என்னரசி! நீ அரசாட்சி செய் நான் கானாட்சிபுரிந்து எனது அந்தக்கரணங்களை வென்று ஆன்மசுகம் பெறுகிறேன்" என்று சிகித்வஜன் கான்செல்லவுறுதி பூண்டான். நள்ளிரவில் நகர்சோதனைக்குச் செல்வதுபோல நடித்து, வெகுவேகமாக மந்தரமலைக் காட்டிற்கு ஓடி, இயற்கைப் பொலிவு மிக்க ஒரு தாமரைக் குளத்தருகே பர்ணசாலையமைத்து அமர்ந்தான். இடுப்புத்துணி, மான்தோல், யோகதண்டம், ஆஸனம், திருவோடு, எல்லாம் வேடத்திற் கேற்றபடி வைத்துக் கொண்டான். முதலில் ஜபவழிபாட்டிற் புகுந்து விரல்தேய உருத்ராக்ஷ மாலையை உருட்டினான்.



இங்கு சூடாலை விழித்தெழுந்து மன்னன் காட்டிற்கு ஓட்டம் பிடித்ததை உடனேயறிந்தாள். தனது யோக சித்தியால் உயரப்பறந்து சுற்றும் தேடி, மன்னன் வறட்டுத் துறவுடன் கானகத்தில் வாடக்கண்டனள். பிறகு தனது தலைநகர் வந்து, அரசன் ஒரு முதன்மையான அலுவலையொட்டிப் பிறநாடு சென்றிருப்பதாகக் குடிகளுக்குத் தெரிவித்து, ஆட்சியைக் கைக்கொண்டு 18 ஆண்டுகள் திறம்பட வகித்தாள், இதற்குள் சிகித்வஜன் அடங்கள் புரிந்து உடம்புலைந்து தளர்ந்து இகமுமின்றிப் பரமுமின்றி ஏங்கித் தவித்தான்

இத்தருணம் திடீரெனஒருநாள் ஒரு வனப்புள்ள வாலிபன் எதிர்நின்றான். சிகித்வஜன் அவனை அன்புடன் வரவேற்றான்.

வாலிபன்: அரசைத்துறந்து, அடவியடைந்து, கொற்றச்செல்வம் நீத்து இச்சிறு குடிலிற்புரியும் தங்கள் கடுந்தவம் அரிது, அரிது!

சிகித்வஜன்: ஆ! தவப்பொலிவு மிக்கீர்! தாங்களே என்னை உண்மையாக அறிந்தீர், தாங்கள் யார்? பெயர் என்ன?

வாலிபன்: நான் பிரமன் வழித்தோன்றல்;என்னைக் கும்பமுனியென்பர் (கும்பத்தால் புலனை யடைக்கியவன்); என் அன்னை ஸரஸ்வதி; என் சிற்றன்னை காயத்ரி; தூயநான்மறைகளும் எனது விளையாடுத்தோழர்.

சிகித்: தாங்கள் மிகவும் பெரியவர் தவக்கனல் தங்கள் முகத்திற் கொழுந்துவிட்டெரிகிறது. தங்களைக்கண்டதே எனது வெற்றி!

கும்பமுனி; இருக்கட்டும், தாங்கள் ஏன் இப்படியெய்தினீர்?

சிகித்: ஞானக்கிழவ! யான் மன்னன் சிகித்வஜன். அரசுஞ் செல்வமும் அறுத்து வெறுத்துப் பிறவிப்பிணி தீருந்தவத்தை நாடிக் கானடைந்தேன், இன்பங்காணிலேன்; துன்பமே மிகுந்தது.

---

(தொடரும்)

உ

# மனோன்மணி மாலை

[நயினார்தீவில் எழுந்தருளியிருக்கும் நாகபூஷணியம்மைமீது யோகி சுத்தானந்தர் பாடியபாடல்களுட்சில. முழுவதும் சீக்கிரம் ஓர்நூலாகவெளி வரும்.
—ஆசிரியர்.

மங்கல மணம்பரவு மலர்தலைக் காலைபோல்
மனமாய விருள் போக்குவாய்
மாசிலாத் தென்றல்போல் வந்தெனது சோர்வினை
மாற்றிமன வீறு தருவாய்

பொங்குதிரை யாழிபோல் என்னுளம் பூரிக்கப்
பொதுவேத முர சொலிப்பாய்
புண்பட்ட நெஞ்சிலே வெண்பட்டு நிலவெனப்
போந்து சாந்தம் அளிப்பாய்

செங்கதிர் ஞாயிறென வேயெனது சித்தமிசை
திவ்ய ஞானம் பொழிகுவாய்
சிங்கமென வீரமும் திருமூலர் யோகமும்
திருக்குறளின் வாழ்வும் அருளாய்

துங்கமிகு நயினையில் தங்கியே புவனந்
தனைக்காத்து அருள் அன்னையே!
சதாசிவ மனோன்மணி சிதாகாச ஓம் சுத்த
சக்தியே போற்றி! போற்றி!

## வேறு

உலக நாயகி உத்தம நாயகி
இலகு சக்தி யிறைவி மனோன்மணி
நலிவு தீர்த்து நலந்தரும் அம்மையே
பொலிவு றச்செய் புதுயுக வாழ்க்கையே.

வேக மின்னெனப் புன்னகை வெள்ளத்தாற்
சோக மெல்லாந் துடைத்தருள் செய்குவாய்
தாக மாகநின் சந்நிதி வந்தனன்
யோக குண்டலி யென்னுயி ரன்னையே.



கருணை வானெனக் கண்ணொளி காட்டுவாய்
தரும மான பயிர்தழைத் தோங்கவே
பருவ மாமழை போலருள் பாலிப்பாய்
உருகு நெஞ்சில் உதிக்கு மனோன்மணீ

வந்து செல்லுமிவ் வாழ்க்கை நலம்பெறச்
சிந்தை சுத்த சிவமய மாகிடத்
தந்தருள் உப சாந்தமும் சக்தியும்
பந்த மற்ற சுதந்தரப் பான்மையே

புயலடித்து வெம் பேரலை விம்மியே
பயமளிக்கும் பவக் கடல் நீந்தியே
இயலுறுந் துறை ஏறிடச் சீவனும்
தயவுசெய் சிவ தாரக சக்தியே

ஏக சக்தி இன்ப வரந்தரும்
யோக சக்தி உயிர்க்குயி ராகிய
போக சக்தி புனித பராசக்தி
நாக பூஷணி நாரணி யம்மையே

தேகச் சட்டை யணிந்திடும் சீவனின்
சோக நாடகந் தீர்ந்து சுகோதய
யோக சித்தி யுடன்பெறச் செய்தருள்
நாக பூஷணி நல்ல பராசக்தி.

மூல குண்டலி முக்குண நாயகி
ஞால மாக்கி நடத்துஞ் சிவாம்பிகே
கால சக்தி கதிதரும் சோதிநீ
தூல சக்தியின் சூட்சும சக்தியே

வீழ்க தீய வினைக்குலம் யாவையும்
சூழ்க தூய சமரசச் சோதியே
வாழ்க மன்னுயிர் வானருள் பாலிப்பாய்
ஊழ் கடந்தொளிர் ஓம் சுத்த சக்தியே.

உ



# முருகா! குமரா! குகனே! வருவாய் வந்து தருவாய் அருளே!

*[கந்தரனுபூதி விரிவுரையாளர் முருக. திரு. இரசபதி தரும் அரிய விளக்கம்]*

உருவா யருவா யுளதா யிலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்
கருவாய் உயிராய் கதியாய் விதியாய்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே.

**பதவுரை:-**

குகனே-(அன்பர்களின் இதய) குகையில் இருப்பவனே; உருவாய்-உருவமாகியும்; அருவாய்-அருவமாகியும்; உளதாய்- (அறியப்பெறும்) உள்பொருளாகியும்; இலதாய்-(அறிய இயலாத)இல் பொருளாகியும்; மருவாய் - மணமாகியும்; மலராய்- (மணத்தையுடைய) மலராகியும்; மணியாய்- (நவ) மணியாகியும்; ஒளியாய்- (அதன்) ஒளியாகியும்; கருவாய்- (எல்லாவற்றிற்கும்) மூலமாகியும்; உயிராய் - உயிராகியும்; கதியாய்-அடைக்கல நிலையமாகியும்; விதியாய்- (கதியளிப்பதற்கு மூலமான) கட்டளை உருவமாகியும்; குருவாய்-குருவாகியும்; வருவாய் அருள்வாய்- வந்து அருள் பாலிப்பாயாக.

**விரிவுரை:-**

உள்ளம் ஒரு குகைபோல்உளது. அதன் நடுவிடம் பிண்டசிதம்பரம் சிதம்பர நடுவில்உள்ள ஒரு ஞானத்திருவுருவம், இடையறாது இன்ப நிருத்தம் செய்துகொண்டேயிருக்கிறது. அந்த அற்புத உருவை, ஓம் குஹேஸாய நம: என்று வியந்து புகழ்கிறது வேதம்.

இதய குகையில்உள்ள அந்தஅருள் ஒளி, தன்னைஉணராத உயிர்களின்மேல் வைத்த இயற்கை இரக்கத்தால்; "நெறியில் செறிந்த நிலை நீங்கி", புறவிழிக்கும் புலனும்படி திகழும் பலதிருமேனி தாங்கும். பக்குவா பக்குவத்திற்குத் தகக்கொள்ளும் அவைகளை "உருவாய் வருவாய்" என்றார்.

அந்த உருவத்திற் பதிந்த உருவமனம், வழிபாட்டின் இறுதியில் அருவமனம் ஆகும், அந்நிலைக்குத்தக்கபடி அருவமாகி நிற்கும்அமல



ஒளியை, ஊன்றி உணரும் உயிர்க் கூட்டம், அப் பேற்றினை, 'அருளாய் வருவாய்' என்பதில் பெறவைத்தார்.

அதன்பின், 'அறிவாலறிந்து' இறைஞ்ச, உள்பொருளாகி நிற்கிறான் ஒளியருள் முருகன். உள் பொருளாந்தன்னை உயிர்கள் தழுவ வரும் அமயம், இல்பொருளாகி விடுகிறான் அந்தஇறைவன். அதனை 'உளதாய் வருவாய் இலதாய் வருவாய்' என்று உவந்து கூறினார்.

அறிய இயலா அந்நிலையில், உணர்வு மயமாக வேண்டுகைசெய்யும் உயிர். வேண்டல் முதிர்வில அருள்மணமாய் வெளிப்படுகிறான் அமலன். 'மூக்கே நீ முரலாய்' என்று அதனை முகந்து உகக்கும் ஆன்மா. ஆதார கமலங்களாகச் சேவைதரும் அந்த ஆறுமுகம். அவைகளைக்கண்டு கனிந்த களிப்பால், 'மருவாய் வருவாய் மலராய் வருவாய்' என்று மகிழ்ந்து கூறினார்.

அவைகளில் சிந்தனை யூறியிருந்த அமயம், பிரமன், திருமால், உருத்திரன், மகேசுரன், சதாசிவம், விந்து, நாதம், சத்தி, சிவம் எனும் நவந்தரு பேதமாக நவமணி நிறம்காட்டி நடிக்கிறான் நம் முருகன். அந்த அனுபவத்தை 'மணியாய் வருவாய் ஒளியாய் வருவாய்' என்று வியந்தார்.

இத்துணை சிறந்த அனுபவம் பெற்றபின், தோன்றியுள பொருள்களெலாம் ஒருவித்தான கருவிலிருந்தே தோன்றுகின்றன. தோன்றும் அவைகளை உயிர்ப்பித்துத் தொழிற் படுத்துகின்ற தருமதுரை முருகனென உருகியுணர்ந்து, அதனை 'கருவாய் வருவாய் உயிராய் வருவாய்' என்று ஓதினார்.

தோன்றி இயங்கிய தொல் பொருளெல்லாம், எவனிலிருந்து தோன்றினவோ, அவனிலேயே இறுதியில் அடைக்கலமாவதையறிந்து வியந்து, அதனை 'கதியாய் வருவாய்' என்றுகனிந்து கூறினார்.

உயிர்களின் உய்தி கருதிய அறப்பெருங் கருணையால், இப்படிவா! அதைச் செய்யாதே! இதைச் செய்! என்றுவேதாகமவழிஇடையறாது உணர்த்தும் கட்டளையுருவாக இருப்பவனைக் கனிந்து கண்டு, 'விதியாய் வருவாய்' என்று கசிந்து போற்றினார்.

உ

# குருமார் தோற்றத்தில் பலர்; உண்மையில் ஒருவர்.

(திரு. வி. க.)

குருமார் வரலாறு ஆராய்ச்சிக்கு எட்டாதது. அவர் ஒவ்வொருபோது ஒவ்வோரிடத்தில் ஒவ்வொருவிதப் பெயரால் போற்றப்படுவர். குருமார் என்றொரு கூட்டம் இருக்கிறது. அவர் தம் தொகை இவ்வளவினது என்று அறுதியிட்டுக் கூறுதல் இயலவில்லை. குருமார் அவதாரமென்றும், அவதார மல்லவென்றும், மனிதராயிருந்து தவத்தால் மேம்பட்டுக் குருநிலை எய்தினவரென்றும், ஞானிகள் வேறு குருமார் வேறு என்றும், அவர் நுண்ணிய பொன்னுடலர் என்றும், சிற்சில சமயம் பருவுடல் தாங்கியும் வருவார் என்றும் உலகம் பலவாறு அவரைப்பற்றிச் சொல்கிறது. எவர் என்ன கூறினுங்கூறுக, குருமார் இருத்தல் உண்மை; அவர்வழி உலகம் நடத்தல் உண்மை.

கடவுள் உறுப்பில்லாதது; உருவமில்லாதது; அசைவற்றது; போக்கு வரவற்றது. அஃது எப்படி வினையாற்றும்? வினையாற்றுதற்கு உறுப்பு வேண்டும், உறுப்புக்கு உடல் வேண்டும். உறுப்பில்லாக் கடவுள் – உடலில்லாக் கடவுள் – இயற்கையை உடலாக்

---

முற்பக்கத் தொடர்ச்சி

இருவினை ஒப்பு மலபரிபாகம் நேரும் உயிர்களுக்கு உவந்து அருள, குருமூர்த்தியாகி வந்து சொருபானுபவம் நேர்விப்பவனை, 'குருவாய் வருவாய் அருள்வாய்' என்று நெகிழ்ந்து நினைந்தார்.

உருவாக அருவாக உளதாக இலதாக, மருவாக மலராக மணியாக ஒளியாக, கருவாக உயிராக கதியாக விதியாக, எம்முகமாயினும் அம்முகம் குருமுகமாகவேணும்! திருவருட் செல்வம் ஒன்றே வேண்டப்பெறும் வருவாய்! அதை அருளவேண்டும் என்று, இதயத்திலிருக்கும் அருளொளிக் குகனை வீறிட்டுக்கூவி வேண்டும் பேறு, அனுபூதிப்பெரும் பேறு என்க.

*[இம்மாதம் 22-ம் தேதி [7-11-53] ஆரம்பிக்கும் ஸ்கந்தர் ஷஷ்டி விரத வேளையில், இதனைவாசகர்கள் பன்முறை கருத்தூன்றிப் படித்து நற்பலனடைவார்களாக ]*



கொண்டும், குருமாரை உடலாகக்கொண்டும் வினை ஆற்றுகிறது; படைப்பாதித் தொழிலைச் செய்கிறது. இறையுடலே இயற்கை; அவ்வுடலுடன் குருமார் உடலும் கடவுளுக்கு உண்டு என்று கொள்க.

குருமார் மாசற்றவர். அவர் தம் மாசற்ற உள்ள மலரில் கடவுள் கோயில் கொள்கிறது. குருமாரை இயக்குவது கடவுள். குருமார் நினைப்பெல்லாம் கடவுள் நினைப்பு; அவர் மொழியெல்லாம் கடவுள் மொழி; அவர் செயலெல்லாம் கடவுள் செயல், உருவமற்றகடவுள் நேரே எதையுஞ் செய்யாது. இயற்கை வாயிலாகவும் குருமார் வாயிலாகவும் காரியங்களை நிகழ்த்துகிறது. முதலில் குறிப்பிட்ட இயற்கை அன்னையையுங் குருமார் கூட்டத்தில் சேர்த்துப்பேசுவது தொன்றுதொட்ட வழக்கு.

குருமார் பலரா? ஒருவரா? அவர் தோற்றத்தில் பலர்; உண்மையில் ஒருவர். அவர் தம் உள்ளத்தில் வீற்றிருக்குங் கடவுள் ஒன்றே. ஒரே கடவுள் அவர் வாயிலாகச் செயல் புரிகிறது. ஒரே கடவுள் ஒளிரும்உள்ளமுடைய குருமார் எங்ஙனம் பலராவர்? அவர் ஒருவரே. குருமார் ஒருவரென்பது தியானயோகத்தில் நன்கு விளங்கும்.

உலகம் தோற்றமுடையது; தோற்றத்திலேயே கருத்துச்செலுத்துவது. தோற்ற நிலையுடைய உலகுக்குக் குருமார்பலராகவே விளங்குவது குருமார் தொகை தெரியாமையால் அவரைப் பலர் என்று சொல்லுவது சம்பிரதாயமாகிவிட்டது. பலரை ஒரு தொகைப்படுத்தவேண்டி, யான் எண்ணி நினைந்து உன்னி முன்னிப்பார்த்ததில், என் உள்ளத்தில் பலர் எண்மராய்ஒருவராயினர். எண்மராவார்: மகமது, இயற்கை அன்னை; கிறிஸ்து, புத்தர், விருஷபதேவர், கிருஷ்ணமூர்த்தி, குமரன், தக்ஷிணாமூர்த்தி. இவ்வெண்மர் பலராவர்; ஒருவராவர். தெய்வம்ஒன்றே என்றவர் மகம்மது; தன் உயிர் என்று அறிவிப்பவர் இயற்கை அன்னை; அன்பு என்றவர் கிறிஸ்து; தருமம் என்றவர் புத்தர்; அஹிம்ஸை என்றவர் விருஷபதேவர்; நிஷ்காமியம் என்றவர் கிருஷ்ணமூர்த்தி; அழகு என்பதைத் தெரிவிப்பது குமரன் கோலம்; சாந்தம் என்பதற்கு அறிகுறி தக்ஷிணாமூர்த்தம் தெய்வம் ஒன்றே என்பது விளங்கும் இடத்தில், அதனோடே மற்ற

ஏழும் விளங்கப்பெறும். "தெய்வம் உயிர்-இயற்கை உடல்"என்னும் உண்மை திகழும் இடத்தில் பிற ஏழும் திகழ்ந்து ஒன்றும். தெய்வம் அன்பு என்பது புலனுகும் போது, அதில் வேறு ஏழும் பொருந்திப் புலனுகி ஒருமைப்படும். ஒன்று விளக்கமுறும்போது, மற்ற எல்லாமும் விளக்கமுற்றுக் கலப்புற்று ஒன்ருகும். ஒன்றை விடுத்து ஒன்று நில்லாது. எவர்க்கு எவரில் – எவர் போதனையில் –வேட்கை உண்டாகிறதோ, அவர், அவரில் - அவர் போதனையில்– அன்பு பூண்டுஒழுகலாம். அவ்வொழுக்கம் தெய்வ நிலையைக் கூட்டுதல் ஒருதலை.

மகமது ஒருமையும், இயற்கையுடலும், கிறிஸ்து அன்பும், புத்தர் தருமமும், விஷபதேவர் அஹிம்ஸையும், கிருஷ்ணமூர்த்தி நிஷ்காமியமும், குமரன் அழகும், தக்ஷுணமூர்த்தி சாந்தமும் தெய்வ உண்மையை உணர்த்துவதைத் தியானத்தில் விளங்கப் பெறலாம். இப்பேற்றிற்குத் துணை செய்வது சன்மார்க்கம்.

சன்மார்க்கம் வேறு உலகமார்க்கம் வேறு என்றும், உலகுக்கு அப்பாற்பட்டது சன்மார்க்கம் என்றும் சிலர் பேசுவதுண்டு. அப்பேச்சு, செயலாகும்போது, வாழ்க்கையில் துன்மார்க்கமே மலிவதாகும், உலகமார்க்கம் வேறென்று வாழ்க்கையில் பலதிறப் பாவங்களைச் செய்து கொண்டு, கடவுள் பூசை ஒன்றே சன்மார்க்கத்துக்குரியதென்று கடவுளைப் பூசிப்பதால் பயன் விளையாது. அப்பூசை சத்தென்னுங் கடவுளிடம்சாராது. அதனுல் பாவங்களே பெருகும்; வாழ்க்கை தூய்மையுருது; துன்மார்க்கம் துதையும்.

சன்மார்க்கமும் உலகமார்க்கமும் ஒன்றே. இரண்டையும் பிரித்து வாழ்வோர் விடுதலையடைதல் அரிது.

"குருவே சிவமெனக் கூறினன் நந்தி
குருவே சிவமென் பதுகுறித் தோரார்
குருவே சிவமாகிக் கோனுமாய் நிற்கும்
குருவே யுரையுணர் வற்றதோர் கோவே."



ஓம்

ஸ்ரீராமகிருஷ்ணுய

## காந்தி நாமாவளி

['ரகுபதி ராகவ ராஜாராம்' மெட்டு]

ஜெய ஜெகன் மோகன காந்தீ ராம்,
ஜெய ஜெக தன்னைகஸ் தூரி ராம்! (ஜெய)
அற்புத சாந்த மகாத்தும ராம்,
கற்பனை கடந்த சாத்வீக ராம்! ,,
சிற்பர ஞான சுகோதய ராம்,
தற்பர மான தயாபர ராம்! ,,
உத்தம கருணு சாகர ராம்,
எத்திசை யும்புகழ் வியாபக ராம்! ,,
நித்ய சரித்திர நாரண ராம்,
சத்ய நிதிக்கொரு பூரண ராம்! ,,
கோழைக் கரிய பூசுர ராம்,
ஏழைக் கருள்செய்யும் ஈசுர ராம்! ,,
கோபத்தை வென்ற குணகர ராம்.
பாபத்தை யுண்ட சிவாகர ராம்! ,,
எல்லா மதத்தும் உள்ளவ ராம்,
கல்லும் கனியச் சொல்பவ ராம்! ,,
பாரதம் செய்தவப் பாலக ராம்,
தீரர் வணங்கிடும் ஆரிய ராம்! ,,
அடிமை விலங்கை யொடித்தவ ராம்,
மடமையைக் கொன்று மடித்தவ ராம்! ,,
ஹரிஜனர் இன்னல் துடைத்தவ ராம்,
பெருகிய பேதம் உடைத்தவ ராம்! ,,
வையகம் உய்ந்திட வந்தவ ராம்,
துய்ய சுதந்திரம் தந்த ராம்! ,,
அஹிம்ஸா தத்துவம் கண்டவ ராம்,
மகிதலம் உய்மொழி விண்டவ ராம்! ,,
வெற்றுரை யென்றும் விடுத்தவ ராம்,
ஒற்றுமைக் குயிரைக் கொடுத்தவ ராம்! ,,
மோகத் திரையைக் கிழித்தவ ராம்,
தியாகக் குன்றில் ஜொலிப்பவ ராம்! ,,
காந்தப் புன்னகை வாய்ந்தவ ராம்,
சாந்தக் கடலாய் வாழ்ந்தவ ராம்! ,,
புண்ணிய ஜென்மம் எடுத்தவ ராம்
எண்ணிய கன்மம் முடித்தவ ராம்! ,,
மண்ணில் விளைந்த மணிச்சுட ராம்,
விண்ணில் எழுந்த தவக்கதி ராம்! ,,
ஜெயபா ரதமகிழ் ஸ்ரீதர ராம்,
ஜெய்ஹிந்த் வந்தே மாதர ராம்! ,,

பரமஹம்ஸதாசன்

## பிரார்த்தனையின் அவசியமும்

# கடவுள் நம்பிக்கையும்

*[தென்னாபிரிக்கா டர்பன் திரு ச. மு. பிள்ளை அவர்கள்]*

**(மகாத்மா காந்தி அவர்சள் கட்டுரையின் மொழிபெயர்ப்பாகுமிது.)**

சொந்த முறையிலும், பொதுஜன ஊழியன் என்ற முறையிலும் நான் கடுமையான கஷ்டங்களை அனுபவிக்க நேரிட்டதை நீங்கள் அறியலாம். அவ்வப்போது திடீர் திடீரென்று ஏக்கம் பிடிக்கும். அப்போதெல்லாம் பிரார்த்தனை செய்வேன். எனது ஏக்கம் பறந்துபோய் விடும். ஆனால் சத்தியத்தை நான் எவ்வளவு எனது வாழ்க்கையில் கொண்டிருக்கிறேனோ, அவ்வளவு தூரம் நான் பிரார்த்தனை செய்வது ஓர் அவசியமாக எனக்கு ஏற்பட்டிருக்கிறது.

பிரார்த்தனை செய்யச்செய்ய கடவுள்பக்தி அதிகமாயிற்று. ஆதலால் பிரார்த்தனை செய்வதில் ஒரு ஆசையும் ஆனந்தமும் ஏற்படத் தொடங்கிற்று. பிரார்த்தனை இல்லாத பொழுது உயிர் வாழ்வதே ரசமற்றுப்போயிற்று. உடலுக்கு எவ்வளவு உணவு அவசியமோ, அவ்வாறே ஆத்மாவுக்குப் பிரார்த்தனை அவசியம். உடலுக்கு உணவைவிட ஆத்மாவுக்குப் பிரார்த்தனை கட்டாயம் வேண்டும் என்று கூடச் சொல்லலாம். புத்தர், ஏசுநாதர், முகம்மதுநபி முதலிய பெரியோர் பிரார்த்தனையினால் தாம் முன்னேறியதாகக் கூறியிருக்கிறார்கள். பிரார்த்தனையின்றி உயிர்வாழ முடியாதெனவும் கூறியிருக்கிறார்கள்.

இப்போது கோடிக் கணக்கான இந்துக்களும், முசல்மான்களும், கிருஸ்தவர்களும் பிரார்த்தனை செய்தே கவலையை நீக்கிக்கொள்கிறார்கள். அவர்களைப் பொய்யர்களென்றும், ஏமாந்தவர்களென்றும், சிலர் கூறுகின்றனர். ஆனால் இந்தப் 'பொய்'தான் எனது உயிருக்கு இன்றியமையாததாக இருக்கிறது. சத்திய உபாசகனான எனக்கு. உயிர்போன்றுள்ள பிரார்த்தனை பொய்யாகுமா?

ராஜீய வானத்தில் ஏக்கமென்னும் மேகம் சூழும்போதும், எனது மனச் சமாதானத்தை நான் இழப்பதில்லை. எனது சமாதானத்தைக்கண்டு அநேகர் வியந்ததுண்டு. அந்தச் சமாதானம் எங்கிரு



ந்து வருகிறது? பிரார்த்தனையிலிருந்துதான். நான் படித்தவனல்ல; நான் வெறும் பிரார்த்தனைக்காரனென்று தாழ்மையோடு சொல்லிக்கொள்கிறேன். அவரவர் மனோதர்மப்படி பிரார்த்தனை நடத்தலாம் என்பது எனது அபிப்பிராயம். ஆனால் நமது முன்னோர்கள் நடந்து சென்ற பழைய பாதையில் நாமும் செல்வது சுலபமெனத்தோன்றுகிறது.

கடவுளிடத்தில் நம்பிக்கை தோன்றுமாறு பிறருக்குப்போதனை செய்ய நானறியேன். சிலவற்றை கண்கூடாகக் காட்ட முடியும்; சில தானே விளக்கமாகும்; சிலவற்றை ஒருபோதும் காட்டமுடியாது. க்ஷேத்திரக் கணித சாஸ்திரத்தில் அடிப்படையான அம்சங்கள் சிலவுண்டு. அதேபோலக் கடவுளின் சத்தியம் அடிப்படையான ஓர் உண்மை. மனித இதயத்தின் சக்தியைக்கொண்டு அவரை அறியமுடியாமலிருக்கும்.

அறிவினால் ஆண்டவனை அறிவதைப்பற்றி பேசவேஇடமில்லை. எங்கும் உறையும் இறைவனை உணருவதற்குப் பிரத்தியட்சப் பிரமாணம் கொடுப்பது எவ்வளவு முடியாதோ, அம்மாதிரியே அறிவினாலும் ஆண்டவனை அளக்கமுடியாது. ஏனெனில் அவர் காரணங்களையும், காரியங்களையும். கடந்தவர்.

கடவுள் உண்டு என்று மெய்ப்பிக்க ஏதேதோ சொல்லப்படுகின்றன. ஆனால், ஓர் சிறு குழந்தை எவ்வாறுதாயினிடம் நடந்துகொள்ளுமோ, அதேமாதிரி பகவானிடத்தில் திடநம்பிக்கையோடு, நான் வாழ்கிறேன். நானிருப்பது உண்மையானால், என்னைப்படைத்த பகவானும் இருக்கிறார் என்பது எனது உறுதி. உலகில் கோடிக் கணக்கானவர்களுக்கும் இதேமாதிரி உறுதியுண்டு. பகவானை வர்ணிக்கவோ. அவரது அனந்த கல்யாண குணங்களை விவரிக்கவோ எல்லோராலும் முடியாமலிருக்கலாம். ஆனால் அவர்களுடைய வாழ்க்கையைக் கூர்ந்து நோக்கினால், பகவத் பக்தி அதில் ஊடுருவி ஓடுவதை, ஒவ்வொரு செய்கையிலும் காணலாம்.

உ

சிவமயம்

# உதிர்ந்த மலர்

[அ. இராமசாமி. ஜோகூர்பாரு, மாலாயா.]

1 பக்தன் உலக துன்பங்களையெல்லாம் இன்பமாகக்கருதுகிறான். ஆனால், அவன் நெஞ்சைப் பிளப்பதான துன்பம் ஒன்று உள்ளது. அதுதான் தெய்வ தரிசனம் கிடைக்கவில்லையே! என்ற தவிப்பு. அத்துன்பம் நேருங்கால் அவன்மனமும் புத்தியும் பாகுபோல் உருகுகிறது.

2 "தெய்வீக அருட்கல்வி" ஆரம்பமாவது எதிலிருந்து என்பது தெரியுமா? வாழ்நாள் வீணாகக் கடந்து விட்டதென்ற வருத்தமும், தெய்வத்திருவருள் இன்பத்தின் ருசியும் ஒருங்கே உணரப்படுவதிலிருந்துதான்.

---

நம்முடைய நம்பிக்கையை மூடியிருக்கும் மாயையைத் தொலைக்க வேண்டும். அதாவது நமக்குஆண்டவனிடத்தில் நம்பிக்கை ஏற்பட வேண்டுமானால், நாம் இதுவரை உலகில் படித்துள்ள படிப்புக்களை மறந்துவிடவேண்டும். அவை நமது அறிவை மயக்கி வழி தெரியாத இடத்தில் கொண்டுபோயிருக்கின்றன. இப்போதைய படிப்பை மறந்தால், நமக்கு வழிதானே புலனாகும். மெய்யடக்கத்தோடும், நமக்கு ஒன்றும் தெரியாது என்றஎண்ணத்தோடும், ஒரு நம்பிக்கையோடும் நாம் தொடங்கவேண்டும். அகண்டமான இந்தஅண்டகோளத்தில் மனிதப்பிறவி எடுத்த நாம் அணுவினும் கேவலமாக வாழ்ந்து வருகிறோமல்லவா? அணுவாவது அதற்கிடப்பட்டுள்ள சட்டப்படி நடக்கும். நாம் இயற்கையை எதிர்ப்பவர்களாதலால் இன்னும் கேவலமானவர்களாக வாழ்கிறோம். ஆனால் நம்பிக்கை இழந்தவர்களுக்கு நான் ஒன்றும் சொல்லமுடியவில்லை.

கடவுளைநம்புவோர் பிரார்த்தனை செய்யவேண்டும். பிரார்த்தனை அத்தியாவசியம். அவ்வப்போது நாம் பகவத் பக்தியை அதிகமாக்கிக் கொள்வதற்காகவே, குறிப்பிட்ட நேரங்களில், குறிப்பிட்ட விதத்தில் பெரியோர் பிரார்த்தனையினால் நமதுவாழ்வில் ஏற்படும் கஷ்டம் என்னும் மாயையினின்று நாம் விடுபடுவோமென நான் உறுதிகூறுகிறேன்.

---



3 தெய்வத் திருவருட் சந்நிதியில் குழந்தையாய் இருப்பதைக்காட்டிலும் மேலான இன்பம் வேறொன்றுமில்லை.

4 லௌகீகர்களிடையே வாழும் பக்தர்கள், தெய்வீக உண்மைகளை எந்த நேரத்திலும் எழுதமுடிகிறதில்லை. தனி இடத்தமர்ந்து "தெய்வ அருள்" வேண்டும்போது உண்டாகும் ஒருவகை எழுச்சியால் தெய்வீக உண்மைகள் மிக எளிதாகத்தோன்றுகின்றன. அச்சமயம் அவர்கள் கையில் கடதாசியும், பேனாவும் இல்லாதிருந்தால் அந்தோ! அரிய சந்தர்ப்பம் வீணாயிற்றே! என்று ஏங்கவேண்டியதாயிருக்கும்.

5 பக்தனின் வாழ்க்கை தெய்வத்திருவருட் சக்தியின் துணைகொண்டு இயங்குவது. ஆதலின், தான் அடைந்த அனுபவ இன்பத்தையே பிறருக்குச் சொல்ல ஆசைப்படுகிறான்,

6 தெய்வத் திருவடியைப் பற்றப்பற்ற உலகத்தொடர்புகள் ஒழிந்து வரும்.

7 நாளைக்கு வேண்டுமென்று தேடிவைக்காத பட்சியைப்போல் அன்றாட வாழ்க்கை நடத்திவருவதுதான் பக்தன் ஒருவனுக்கு மிகமிக பொருத்தமான வாழ்க்கையாகும்.

8 லௌகீகர்களிடையே வாழும் பக்தனின்வாழ்க்கையில் சிற்சில சமயங்களில் பெருங்குறைகள் ஏற்பட்டுவிட்டதாகத் தோன்றும். மறுகணம் தெய்வக் குழந்தையாகிய எங்கள் வாழ்க்கையில் குறையிருக்க காரணம் இல்லையே என்று தனியிடத்தமர்ந்து தெய்வத் திருச்சபையில் விளக்கம் கோரி பிரார்த்தித்தால் வாழ்வில் நடைபெறும் நிகழ்ச்சிகள் அனைத்தும், தெய்வத்திருவருட் சந்நிதிக்கு இட்டுச்செல்லும் வழிகளாகக் காணப்படும்.

9 பக்தனுடைய சாதனை மிகமிக சுலபமானது. அவன் தெய்வீக குழந்தையாகவே இருக்கவிரும்புகிறான். ஆதலால், சிறிய துரும்பையும் அவன் பாரமாக ஏற்றுக்கொள்வதில்லை. சகல பாரத்தையும் தெய்வத்திருவடியில் ஒப்படைத்துவிடுகிறான். ஒப்பற்ற காருண்யமுள்ள மாதாவானவள், பக்தன்தரும் சகலபாரத்தையும் சந்தோஷமாக ஏற்றுக்கொண்டு, அதற்குப்பதிலாக சகல கலாவல்லமையும் கடைக்கண்நோக்கத்தையும் தந்து ஆதரிக்கிறாள். உலகில் இதனினும் பேறு வேறு எதுவும் உண்டோ?

சுபம்!

உ

# உணவைப் பழிக்காதே, உணவை எறியாதே

[ராஜாஜீ]

பல கோடி ஜீவராசிகளின் உடல்கள் அனைத்தும் அவை உண்ணும் உணவிலிருந்து உண்டாகின்றன. ஜீவன்களின் உயிரைத் தாங்குவதும் உணவேயாகும். இவ்வளவேயல்ல, எல்லா ஜீவன்களும் முடிவில் வேறு ஜீவன்களுக்கு உணவாகவே முடிகின்றன. ஆராய்ந்து பார்த்தால் ஒவ்வொரு தாவரவகையும் பிராணிவகை ஜீவனும் வேறு தாவர சங்கம உயிர்களுக்கு ஆகாரமாய் முடிவதை அறிவோம். வேரூன்றி வளரும் செடி முதலிய உயிர்களும், ஊர்ந்தும், பறந்தும் கால்களைக்கொண்டு நடந்தும் செல்லுகின்ற எல்லாப் பிராணிவகைகளும் தம் உடல்களை ஒன்று மற்றொன்றுக்கு உணவாகவே உதவுகின்றன. இதுவே சிருஷ்டி அமைப்பு.

சிருஷ்டியிலுள்ள அனைத்தையும் உண்டாக்கிக் காப்பாற்றி, ஒன்றுக்கொன்று இன்றியமையாத சம்பந்தமுமாகின்ற இந்த 'உணவு' என்னும் பொருளிலே பிரம்மத்தைக் காணலாம் என்பது உபநிஷத்து உபதேசம்.

"அதோ அந்த மாமரத்தின் வடக்குக் கிளையைப்பார். அதன் மேலிருக்கும் ஏழு நட்சத்திரங்களுக்குப் பெயர் சப்தரிஷி. அதில் வால்போல் நீண்டு கிடக்கும் மூன்று நட்சத்திரங்களைப் பார்" என்று இவ்வாறு படிப்படியாகப் பையனுக்குச் சொல்லி, அருந்ததி நட்சத்திரத்தைக் காட்டுவதுபோல, உணவின் பேரிரகசியத்தை விளக்கி, அதிலிருந்து படிப்படியாகப் பிரமத்தை முனிவர் உபதேசிக்கிறார்.

உலக சிருஷ்டி அனைத்தையும் ஒன்றுக் கொன்று பிணைத்துக் கட்டும் உணவு என்ற சிறந்ததொரு பொருளை அலட்சியம் செய்யலாகாது, அதன் அருமையைஅறிந்து மதித்தல் வேண்டும்.

**அன்னம் ந நிந்த்யாத் தத்வ்ரதம்||**

"உண்ணும் உணவைப் பழிக்கலாகாது; இது விரதமாகும்." என்று தைத்திரீய உபநிஷத்தில் பிருகுவுக்கு அவர் தகப்பனார் உபதேசிக்கிறார்.



தற்காலத்து வைத்தியசாஸ்திரப் புலவர்களும் இதையே சொல்வார்கள். ஆகாரம் உட்கொள்ளும் சமயத்தில் அதைப் பழித்தலோ, குறை கூறலோ, சந்தேகித்தலோ, ஆரோக்கிய முறையாகாது. சாப்பிடும்போது, இது எனக்கு ஆரோக்கியந்தரும், பலம் தரும், உள்ளத்தையும் சுத்தமாக்கும் என்றே எண்ணி உணவை உட்கொள்ளவேண்டும் என்பது ஆரோக்கிய சாஸ்திர நியதி. நாம் எண்ணும் எண்ணங்கட்கு அதிக சக்தியுண்டு. புசிக்கும்போது நாம் கொள்ளும் நம்பிக்கையே உணவை நல்லதாகவும் தீயதாகவும் செய்யும்.

**அன்னம் ந பரிசக்ஷீத தத்வ்ரதம்||**

"உணவை எறியலாகாது; இது ஒருவிரதம்." உணவு நன்றாயில்லை என்று தள்ளக்கூடாது. நன்றாயிருப்பதையும் அளவுக்கு மிஞ்சி பரிமாறிக்கொண்டு பிறகு எறியக்கூடாது. உயிரைக் காப்பாற்றக் கூடிய உணவுப்பொருள்களைக் காட்டிலும் அருமையான பொருள் உலகத்திலுண்டோ? உணவை வீணாக்குதல் கூடாது. மிக்கஅருமையானபொருளை அலட்சியம் செய்வதோ, வெறுப்பதோ ஒழுக்கமன்று.

இந்த முக்கியமான ஒழுக்க முறையை இப்போது நம் நாட்டில் சனங்கள் உணரவில்லை. பல்லாயிரம் வருடங்களுக்குமுன், வேதாந்த ஞானத்தில் ஒருபாகமாக உபநிஷத்திலும்கூடச் சொல்லி, விளக்கப்பட்டதாயினும், அதை இன்னும் கவனிக்காமல் மூடர்களைப்போல் நாம் நடந்து கொள்கிறோம். வேண்டிய அளவுக்குமேலும், வேண்டாதவர்களையும், வற்புறுத்திப் பரிமாறுவதும், வற்புறுத்தலை எதிர்பார்ப்பதும், உணவு முடிந்து எறியும் இலைகளில் ஏராளமான தீன்பண்டங்கள் கிடப்பதும் நம்நாட்டின் கெட்ட பழக்கமாகி வருவதை பார்க்கிறோம்.

**அன்னம் ந நிந்த்யாத்||**
**அன்னம் ந பரிசக்ஷீத||**

என்ற உபநிடதத்து உபதேசத்தை நாம் இப்போதாவது கவனித்து நம்முடைய தினசரி வழக்கத்தைத் திருத்திக்கொள்ளவேண்டும்.



# செய்தித்திரட்டு

சென்னையில் நிறுவப்படவிருக்கும்

## திரு. வி. க. அவர்களின் ஞாபகார்த்த மண்டபநிதி நன்கொடையாளர்கள்.

| | | | |
|---|---|---|---|
| கௌரவ சேர். க. வயித்தியநாதன் | கொழும்பு | ரூ | 25–00 |
| திரு. க. குமாரவேல் | பூண்டுலோயா | | 25–00 |
| ” க. இராமச்சந்திரன் | கொழும்பு | | 10–00 |
| ” செ. விசாகப்பெருமான் | யாழ்ப்பாணம் | | 10–00 |
| ” சி. சுந்தரலிங்கம் | கொழும்பு | | 10–00 |
| ” நா. முத்தையா | நாவலப்பிட்டி | | 10–00 |
| ” கலியாணசுந்தரப் பித்தன் | குரும்பசிட்டி | | 10–00 |
| ” மு உ., மு. சுவாமிநாதன் | நாவலப்பிட்டி | | 10–00 |

☞ ஏனைய பெயர்கள் அடுத்த சுடரில் வெளிவரும்.

## ஸ்ரீ வள்ளிமலை சுவாமிகள்.

ஸ்ரீ வள்ளிமலை திருப்புகழ் சச்சிதானந்த சுவாமிகள் மூன்றாவது குருபூசை, நிகழும் விஜயஹூ கார்த்திகைமீ 3–ம், 4–ம் திகதிகளில் ஸ்ரீவள்ளிமலை சுவாமி சச்சிதானந்த திருப்புகழ்ச் சபையாரால் பர்வத ராஜன் குன்று திருப்புகழ் ஆஸ்ரமத்தில் சமாதிபூஜை, திருப்புகழ் பாராயணம், அன்னதானம் முதலாய வைபவங்களுடன் கொண்டாடப்படும்.

பரவா திருந்த திருப்புகழைப்
பாரிலெங்கும் பரப்புதற்கே
பரமன் முருகன் அனுப்பிவைத்த
பண்பா போற்றி! திருப்புகழை

இரவோ பகலோ எப்பொழுதும்
இனிக்க இனிக்கப் பாடிமகிழ்
இன்பா போற்றி! பொருட்கேற்ற
இராக தாளம் இனிதமைத்த



உரவா போற்றி! அடியார்கள்
உவக்க உவக்கத் திருப்புகழை
ஓதிக் கொடுத்த அருமணியே!
ஒப்பில்லாத குரு மணியே!

கரவா உளத்தார்க் கருள்புரிந்த
கண்ணே “சச்சி தானந்தக்”
கனியே போற்றி போற்றி எங்கள்
சருக்தே நின்பொற் கழல்போற்றி

---

## திருக்குற்றாலத்தில் 9-வது அந்தர்யோகம்

அகமுகப்பட்ட அறநெறி வாழ்க்கை, ஞான ஒடுக்கம், சத்சங்கம் முதலாய உயர்ந்த நோக்கங்களுடன் நவம்பர் 13-ம், 14–ம் திகதிகளில் சுவாமி ஸ்ரீ சித்பவானந்தர் அவர்களின் தலைமையில் ஒன்பதாவது அந்தர்யோகம் திருக்குற்றாலத்தில் நடைபெறவிருக்கும் செய்தியை வாசகர்கட்கு மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறோம். தாய்மார்கட்குத் தனியிடமுண்டு. இந்த அந்தர் யோகத்தில் கலந்து கொள்ள விரும்பும் அன்பர்கள் திரு. குத்தாலலிங்கம்பிள்ளை அவர்கட்கு எழுதி ஏனைய விபரங்களை அறிந்து கொள்ளலாம். அவரின் விலாசம்:–

I. S. குத்தாலலிங்கம் பிள்ளை
புதுவீடு.
இலஞ்சி தென்காசி.

---

## தூய அன்னை கிருஷ்ணபாயின் ஜெயந்தி

ஆனந்தாஸ்ரம அன்னை கிருஷ்ணபாய் அவர்களது ஐம்பதாவது ஆண்டு ஜெனன விழா சென்ற மாதம் பூரநட்சத்திரம் பொருந்திய சுபதினத்தன்று (6–10-53) கொள்ளுப்பிட்டியில் யாகம், தோத்திரப்பாடல், தியானம் நாமஜெபம், அர்ச்சனைமுதலாய அம்சங்களுடன் மிகவும் புனிதமான முறையில் கொண்டாடப்பட்டது.

# மலைவளர் காதலி

பதியுண்டு நிதியுண்டு புத்திரர்கண் மித்திரர்கள்
பக்கமுண் டெக்காலமும்
பவிசுண்டு தவிசுண்டு திட்டாந்த மாகயம
படரெனுந் திமிரமணு காக்
கதியுண்டு ஞானமாங் கதிருண்டு சதிருண்டு
காயசித் திகளுமுண்டு
கறையுண்ட கண்டர்பா லம்மைநின் ருளிற்
கருத்தொன் றுமுண்டாகுமேல்
நதியுண்ட கடலெனச் சமயத்தை யுண்டபர
ஞானவா னந்தவொளியே
நாதாந்த ரூபமே வேதாந்த மோனமே
நானெனு மகந்தை தீர்த்தென்
மதியுண்ட மதியான மதிவதன வல்லியே
மதுசூ தனன்றங்கையே
வரைராச னுக்கிருகண் மணியா யுதித்தமலை
வளர்காத லிப்பெணுமையே,

-தாயுமானவர்-

பொழிப்புரை: பல நதிகளை உட்கொள்ளுங் கடல்போல, உலகின் சமயங்களெல்லாவற்றையும் உட்கொண்ட ஞானானந்தச் சுடரே! நாத தத்துவத்தின் முடிவாகிய உருவே! வேதமுடிவில் விளங்கும் மௌன நிலையே! அறிவுருவாகிய மதிவதன வல்லியே! திருமாலின் தங்கையே! மலையரசனுக்கு இரு கண்மணிபோன்ற உமையே! விடமுண்ட கண்டரின் இடப்பாகத்தமர்ந்த அன்னையே!

உன்திருவடியில் நினைப்பொன்றுமே உளதாயின் மாடமாளிகை செல்வம், புத்திரர், மித்திரர், உறவினர் ஆகிய சகல சம்பத்துகளுமுண்டு; எப்போதும் பவிசும் தவிசும் உண்டு; யமதூதர் அணுகமுடியாத நற்கதியுண்டு; ஞானம் ஆகிய சூரியனுண்டு; பலவித காயசித்திகளுமுண்டு.

---

செய்தித்திரட்டு...

அன்னையாரின் துறவு வாழ்க்கையின் வெள்ளிவிழாத் தொடரில் 1-10-53ல் ஆரம்பிக்கப்பட்ட நாமலிகித ஜெபயாகத்தில் இலங்கையில் அநேக பக்தர்கள்பங்குபற்றுகிறார்கள். சுவாமி இராமதாஸர் அவர்களிடமிருந்து கடைசியாக வந்த கடிதத்தின்படி, இந்தியாவின் நாலா பக்கங்களிலுமிருந்து நூற்றுக்கணக்கான அன்பர்கள் இந்த ஜெப வேள்வியில் ஆர்வத்துடன் சேர்ந்துள்ளார்கள் என அறிகிறோம்.